Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.799/2025

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.எஸ்.ரகுபதி** | Occupation | சார்பு ஆய்வாளர் |
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2026.

17.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிகிறேன். கடந்த 18.10.2024ம் தேதி காலை 09.00 மணிக்கு நானும் தலைமை காவலர் 1530 பாலசுப்பிரமணியன் மற்றும் தலைமை காவலர் 2107 திரு.எட்வின்ராஜா ஆகியோர் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக காலை 09.00 மணிக்கு பூவநாதபுரம் விளக்கு அருகே உள்ள Essar Bulk பின்புறம் சென்ற போது ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணியன் மகன் பாலமுருகன் வயது 30, அரசு மதுபானக்கடையில்

1) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old chef brandy பாட்டில்கள்–24

2) சுமார் 180 எம்எல் அளவு கொண்ட One man army XXX Rum பாட்டில்கள்–10

3) சுமார் 180 எம்எல் அளவு கொண்ட Old chef stron xxx rum பாட்டில்–1 ஆகியவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார். எங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்த போது சட்ட விரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ய வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். அதன் பின் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தில் அருகில் உள்ள நபர்கள் யாரும் அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து செய்ய ஒப்புக்கொள்ளாததால் போலீஸ் பார்ட்டிகாகிய நாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம்.

பின்னர் எதிரியை கைது செய்து மேற்படி வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.137/2024 பிரிவு 4(1)(C)TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.10.2024ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் பாலசுப்பிரமணியன், தகா.எட்வின்ராஜா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது 18.10.2024ம் தேதி பிரிவு 4(1)(C)TNP Act–ன் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு சொத்துக்கள் கடந்த 30.11.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொட்டி அளிக்கப்பட்டது. மேற்படி வழக்கு சொத்துக்களின் படிவம் 91 குற்ற இறதி அறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை 18.10.2024 அன்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையும் அன்றே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் மேற்படி முதல் தகவல் அறிக்கையானது 19.07.2025 அன்று தான் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் சம்பவத்தன்றே குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தது சரிதான். மேற்படி வழக்கு சொத்தை அழித்த பின்பு தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக மேற்படி மதுபான பாட்டில்களை அழிப்பதற்கு நாங்கள் தான் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புவோம். ஆனால் சம்பவத்தன்றே நான் மேற்படி வேண்டுகோள் கடிதத்தை அனுப்பவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களை குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி இருந்திருந்தால் அவரிடம் அத்தாட்சியில் கையெழுத்து பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையிலும் மேற்படி வழக்கு சொத்துக்களை அழித்தது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி படிவம் 91யை நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதனை அழிக்கப்பட்டது சம்பந்தமாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான்.

மேற்படி வழக்கு சொத்தை அழிப்பது சம்பந்தமாக நான் அனுப்பிய வேண்டுகோள்கடிதம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எதிரியை சோதனை செய்வதற்கு முன்பு அவரிடம் சோதனை சம்மதம் கடிதம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்பட்டதா இல்லை. எதிரியிடம் யாரும் மதுபானம் பெற்றதாகவோ, அல்லது அவர் யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ எந்தவித சாட்சியமும் இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுவிற்றதாக பணம்எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி சட்டவிரோதமாக மேற்படி மதுபானங்களை விற்றிருந்தால் சம்பவ இடத்தின் உரிமையார் புகார் கொடுத்திருப்பார் என்றாலும், ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு புகார் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கிணங்க எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்துக்கள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அரசு மதுபான கடை இருக்கும் பொழுது எதிரியிடமிருந்து மதுபானங்கள் வாங்க வேண்டிய அவசயமில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் தயார்செய்யப்படவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரிதான். எதிரியை கைது செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.